REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆவணி 21உ வெள்ளி (6—9—57) ★ ★ வெளியூர்: ஆவணி 22உ சனி (7—9—57) [இதழ் 72

சென்னை உயர் நீதிமன்றத்தில்!

புதுடில்லி, செப். 6—

1956-ம் ஆண்டு மார்ச் 31-ந் தேதிவரையில் 6,663 சாதாரண வழக்குகளும், 263 கிரிமினல் வழக்குகளும், 892 'ரிட்' மனுக்களும் சென்னை உயர் நீதிமன்ற விசாரணையில் இருந்தனவாம்!

1957-ம் ஆண்டு மார்ச் 31-ந் தேதி முடிய 5,561 சாதாரண குற்ற வழக்குகளும், 357 கிரிமினல் குற்ற வழக்குகளும், 937 'ரிட்' மனுக்களும் விசாரணையில் இருந்தனவாம்!

மக்கள் சபையில் உள்நாட்டு அமைச்சர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

டாடா நிறுவன இயந்திரங்களை வாங்கியதில் ஊழல்

இறக்குமதி செய்வதைவிட கூடுதலான விலை தந்த விபரீதம்

'செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் அறிவாளிகளையும் திகைக்க வைக்கிறது'

'பிரதம தணிக்கை அதிகாரியும் உடன்படிக்கை விதிகளைப் புரிந்துகொள்ள முடியவில்லை'

மக்கள் சபையில் பெரோஸ் காந்தி கண்டனம்

தொழிற்சாலையை தேசீயமயமாக்க வேண்டுமெனக் கோரிக்கை

புதுடில்லி, செப். 5—

டாடா புகைவண்டி இயந்திரத் தொழிற்சாலை, இரயில்வே குழு, காப்பு வரிக் குழு ஆகிய மூன்றும், காங்கிரசுக் கட்சி உறுப்பினர்களாலும் மற்ற உறுப்பினர்களாலும் மக்கள் சபையில் பலத்த கண்டனத்துக்கு உள்ளாயின.

டாடா இயந்திரத் தொழிற்சாலையில் உருவாக்கப்படும் இரயில்வே எஞ்சின்கள், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் இயந்திரங்களையும், அரசாங்கத்திற்குச் சொந்தமான சித்தரஞ்சன் தொழிற்சாலையில் உருவாக்கப்பட்டுவரும் இயந்திரங்களையும்விட விலை மிகவும் கூடுதலாக இருக்கிறது என்றும், அரசாங்கம் அளித்த அனைத்து உதவிகளையும் பெற்றுக்கொண்டும்கூட, ஒப்பந்த நிபந்தனைகளின்படி காலாகாலத்தில் இயந்திரங்களைத தயாரித்துத்தர டாடா தொழிற்சாலை தவறி இருப்பதால், அத்தொழிற்சாலையை தேசியமயமாக்குவதே அதற்குறிய பரிகாரம் என்றும் மக்கள் சபை உறுப்பினர் பலரும் கருதுகின்றனர்.

டாடா இயந்திரத் தொழிற்சாலையுடன் இரயில்வே குழு செய்துகொண்டுள்ள உடன்படிக்கையின் தன்மையைக் குறித்துமட்டுமே அல்லாது, இயந்திரங்களுக்கு அந்த நிறுவனம் விதித்துவரும் வரைகடந்த விலை பற்றியும், ஒப்பத்த காலத்திற்குள் இயந்திரங்களை அளிக்கத் தவறியது பற்றியும், தன்னிடம் உள்ள மனித ஆற்றலையும், இயந்திர ஆற்றலையும் தக்கவகையில் பயன்படுத்திக்கொள்ள அந்த நிறுவனம் தவறிவிட்டிருப்பது பற்றியும், மக்கள் சபையில் கண்டனங்கள் கிளம்பின.

டாடா தொழிற்சாலை கோரியதைவிட, காப்பு வரி நிர்ணயக் குழு. இயந்திரங்களுக்கு அதிகமான விலை நிர்ணயித்திருப்பதைக்கண்டு பல உறுப்பினர்கள் ஆச்சரியப்பட்டனர்.

விவாதத்தைத் தொடங்கி வைத்த பெரோஸ்காந்தி, டாடா இயந்திரத் தொழிற்சாலையில் உருவாக்கப்பட்டுவரும் புகைவண்டி இயந்திரங்களின் விலை, இங்கிலாந்து, ஜப்பான், செக்கோஸ்லோவேகியா முதலிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் இயந்திரங்களைவிடக் கூடுதலாக இருக்கிறது என்றும், சித்தரஞ்சன் தொழிற்சாலையில் கட்டப்பட்டுவரும் இயந்திரங்களைவிடவும் விலை கூடுதலாக இருக்கிறது என்றும், விலை புள்ளிவிவரங்களுடன எடுத்துக்காட்டினார்.

'துவக்க நிலை சாதாரண இரட்டை தேய்மானம்' என்ற பெயரில் டாடா தொழிற்சாலைக்கு அரசாங்கத்தால் அதிகப்படியாகத் தரப்பட்டுள்ள ரூ. 1·14 கோடியை மேற்படி தொழிற்சாலையிடமிருந்து திரும்பப்பெற அரசாங்கம் முன்வரவேண்டும் என்றும், இந்தத் துவக்கக்கால உதவி ஏற்பாடு, அரசாங்கமும் தொழிற்சாலையும் செய்துகொண்டுள்ள உடன்படிக்கையில் இடம் பெற்றிருக்கவில்லை என்றும் பெரோஸ்காந்தி எடுத்துக் கூறினார்.

இந்தத் துவக்கநிலை இரட்டைத் தேய்மான உதவித் தொகை, புகைவண்டி இயந்திர உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்குப் பதிலாக வேறு பணிக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்றும், அதாவது இவ்வுதவிப் பணத்தைக்கொண்டு டாடா தொழிற்சாலை 'டிரக்'குகளையும் 'ரோட் ரோலர்'களையும் உற்பத்திச் செய்திருக்கிறது என்றும், மேற்படி உறுப்பினர் விளக்கிக் கூறினார்.

பொதுக்கணக்குத் தணிக்கைக் குழு அறிக்கை, காப்பு வரி நிர்ணயக் குழு அறிக்கை, மற்றும் தொடர்புடை அறிக்கை முதலியவற்றிலிருந்து டாடா இயந்திர தொழிற்சாலை தொழில்பட்டுவரும் தன்மைபற்றி, தக்கப் புள்ளி விவரங்களை அவர் எடுத்துக் காட்டிவிட்டு, செய்து கொண்ட உடன்படிக்கைப்படி டாடா இயந்திர நிறுவனம் செயல்படத் தவறிவிட்டது என்று அவர் விளக்கமளித்தார்.

அதற்குப் பரிகாரமாக மேற்படி தொழிற்சாலையைப் பொதுத்துறையின்கீழ் உடனடியாகக் கொண்டுவர வேண்டும் என்று அவர் கோரினதுடன், இதை இன்று செய்ய அரசாங்கம் முன்வரவில்லையானால், நாளை இதைச் செய்ய அரசாங்கம் முன்வரக்கூடும் எனத் தாம் திடமாக நம்புவதாக அவர் எடுத்துரைத்தார்.

"அரசாங்கத்திற்கு நான் அளிக்கும் மற்றொரு அறிவுரை, 'இலாபமும் இல்லை—நஷ்டமும் இல்லை' என்ற அடிப்படையில் இயங்கும் ஒரு தொழில் நிறுவனத்திடம் அரசாங்கம் இனி உடன்பாடு செய்துகொள்ள முயற்சிக்கக் கூடாது என்பதாகும்"

என்று, அவர் கூறியபொழுது மக்கள் சபையில் ஏற்கனவே இருந்த சிரிப்பொலி பலத்த ஆரவாரமாக மாறிவிட்டது.

"உயர்ந்தபட்ச வியப்பும், தந்திரமும், குழப்பமும் நிரம்பியதாக உள்ளது. நாட்டின் சிறந்த அறிவாளிகளையும் திகைப்படைய வைப்பதாகவும் இருக்கிறது"

என்று, டாடா இயந்திர தொழிற்சாலையான 'டெல்கோ'வும், இரயில்வே குழுவும் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தைக் குறித்து பெரோஸ்காந்தி சித்தரித்தார்.

"உண்மைகளை மூடிமறைக்கவும், குழப்பத்தை உருவாக்கவும் கூடியவகையில் மிக மிகத் தந்திரமாக ஆக்கப்பட்டுள்ள இது போன்ற உடன்படிக்கையை நான் இதுவரை கண்டதே கிடையாது. நான் அதைக் கண்ட பொழுது, நான் பெற்றுள்ள கணக்கு அறிவைக் குறித்து எனக்கே தடுமாற்றம் ஏற்பட்டது. போதுமான அளவில் நிதி—கணக்கு பற்றி நான் இன்னும் தெரிந்துகொள்ளாது இருக்கிறேன் என்று நினைக்கலானேன்.

இவ்வுடன்படிக்கையை நான் முதல் முதலாகக் காண நேர்ந்த பொழுது, நான் பெரியதோர் அதிர்ச்சிக்குள்ளானேன். நான் நிதி ஆலோசகர்களை (இரயில்வே குழு) சந்திக்கவேண்டியதும், எப்படி இந்த உடன்படிக்கையைச் செய்துகொண்டீர்கள் எனக் கேட்கவேண்டியதும் இருக்கின்றன. இம்முழு விவகாரத்தில் எனக்கு சிறிதளவு ஐயப்பாடு இருக்கிறது"

இவ்வாறு, முன்னாள் கணக்குத் தணிக்கைத் துறை தலைமை அதிகாரியாக இருந்த காஹரி ராவ் அவர்கள் 3—11—52-ல் பொதுக் கணக்குத் தணிக்கைக் குழுவிடம் குறிப்பிட்டிருப்பதை பெரோஸ்காந்தி மக்கள் சபையில் படித்துக் காட்டினார்.

"உடன்படிக்கையைப் புரிந்து கொள்வது மிகவும் கடினமாக இருக்கிறது. உடன்படிக்கையில் உள்ள நிபந்தனைகள் பலவற்றை என்னால் தெரிந்துகொள்ள முடியவில்லை என்பதை நான் திட்டமாகக் குறிப்பிடுகிறேன். இது பற்றி நாங்கள் பெரிதும் அதிருப்தி உடையவர்களாக இருக்கின்றோம். இதை எப்படிக் கையாளுவது என்றே எங்களுக்கு விளக்கமாக வில்லை."

இவ்வாறு, இப்பொழுது இந்தியப் பேரரசில் கணக்கு ஆய்வுத்துறை தலைமை அதிகாரியாக உள்ளவரும், இரயில்வே துறையின் முன்னாள் நிதி அதிகாரியாக இருந்தவருமான ஏ.கே. சாண்டா கூறியுள்ளதை அவர் மக்கள் சபையில் சுட்டிக்காட்டினார்.

"இவைதான், கணக்குத் துறையில் மிக உயர்ந்த நிலையில் உள்ளவர்களின் கருத்துக்களாகும் இதுமுழுதும் ஒருதலைபட்சமான உடன்படிக்கையாகும். இதற்கு எப்படித்தான் அரசாங்கம் உடன்பட்டதோ தெரியவில்லை?"

(பிற்பகுதி நாளை வெளிவரும்)

கத்தியுடன் உலவிய நபர் நங்கவரத்தில் கைது

மிராசுதாரரின் கையாள் என நம்பப்படுகிறது

திருச்சி, செப். 6—

கைத் தடிக்குள் மறைத்துச செருகப்பட்டிருந்த கத்தியுடன் நடமாடிக் கொண்டிருந்த ஒரு பேர்வழியை நேற்று போலீசார் நங்கவரத்தில் கைது செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

அந்தப் பேர்வழி, ஒரு பெருநில மிராசுதாரரின் கையாள் என்று சொல்லப்படுகிறது.

அசாம் பகுதியில் அமைதி நிலவ....!

நாட்டுப் பிரிவினையே நன்மருந்து

மலைசாதியினர் கழகம் அறிவிப்பு

ஷில்லாங், செப், 5—

"அசாம் மலைப்பகுதிகளில் அமைதி நிலவவும், அரசியல் பிரச்சினைக்கு நிரந்தர பரிகாரம் ஏற்படுவதற்குமான ஒரே ஒருவழி, பல்வேறு பகுதிகளில் வதியும் நாகர்கள் அனைவரையும் அசாம் மாநிலத்திலிருந்து பிரித்து, ஓர் தனியாட்சியின்கீழ் இயங்கச் செய்வதேயாகும்"

என்று, தனி நாகர் நாடு கோரி போராடிவரும் கிழக்கிந்திய மலைசாதியினர் கழகம் ஓர் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அந்தத் தீர்மானத்தை அக்கழகத்தின் பொதுச்செயலாளரான காஜி என்பவர் பிரகடனப்படுத்தியிருக்கிறார்.

அவர் மேலும் தனது கருத்தைத் தெரிவிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"இந்தியாவின் கிழக்கு எல்லைப்புறத்தில் உள்ள மலைசாதியினருடன் நாகர்களையும், தனியாக தங்கள் தாயகத்தில் பொலிவுறச் செய்வதே ஒரு நல்ல அரசியல் சூழ்நிலையை உருவாக்க வல்லது. மலைப் பகுதிகளில் அமைதி நிலவச் செய்ய, நேர்மையான முறையில் ஆராய்ந்து ஒரு நல்ல முடிவு செய்யவேண்டும்.

"அசாம் மாநில அரசாங்கம் எல்லா மலைப் பகுதிகளையும் தங்கள் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரத் தீவிரம் காட்டுகிறது; இதை நாகர்கள் வன்மையாகக் கண்டிக்கின்றனர்.

"நாகர் நாட்டைத் தனியே பிரித்து, அதற்குரியவர்களான நாகர்களிடமே அதை ஒப்படைக்க வேண்டும்; இந்த ஏற்பாடு ஒன்றுதான் சிக்கலைத் தீர்க்க உள்ள ஒரே ஒருவழியாகும்."

புதுடில்லி, செப். 6—

செல்வ வரி மசோதாவில் எவ்வித மாறுதல்களும் செய்யாமல் மாநிலங்கள் சபை அதை மக்கள் சபைக்கு அனுப்பியுள்ளது.

இந்த வாரம்
ஆனந்தவிகடன்
வாசித்தீர்களா?

நம் நாடு

சென்னை 6—9—57 வெள்ளி

இந்தி மொழிக்கு எதிராக!

ஆற்றலில் பலவகை உண்டு. அதுபோன்றே ஆற்றலைப் பெறுவதற்குரிய சாதனங்களும் பல உண்டு.

ஆற்றல் அனைத்திலும் பண ஆற்றல் வலிவுமிக்கது. மற்றவர்களை வளைக்கும் தன்மை கொண்டுள்ளது.

பணத்தின் மூலம் ஈட்டப்பெறும் ஆற்றலைவிட கல்வி மூலம் எய்தும் ஆற்றல் வன்மை உடையது. இவ்வுண்மை, தெரியப்பட வேண்டிய அளவுக்கு நம்மில் பலரால் தெரிந்து கொள்ளப்படாமல் இருக்கிறது.

'அவர் படித்தவர்—அவர் படியாத நம்மனைவரினும் சிறந்தவர்' எனத் தெரிந்தோ, தெரியாமலோ சிற்றூர் மக்கள் பேசுகின்றனர். படித்துள்ளார் என்பதற்காகவே, சிலரை மக்கள் உயர்வாகக் கொள்ளுகின்றனர்.

'அவர் கல்வி கேள்விகளிற் சிறந்தவர்—அவரைப் பாராட்டுதல் வேண்டும்' என்றும் மக்கள், கல்வி கற்றவர்களின் ஆதரவைப் பெற அவாவுறுகின்றனர்.

எனவே, பணத்திற்கு இருந்துவரும் தனி ஆற்றலை, அதை உடைத்தாயிருப்போர் பெற்று, அதன் துணைகொண்டு பலரைப் பணியவைத்து அல்லது கவர்ந்து, தனது தேவைகளை மிக மிக இலகுவாக நிறைவேற்றிக்கொள்வதை நாம் தினம் தினம் கண்டுவருகிறோம். அதன் மூலம், பணத்தின் தனி ஆற்றலையும்உணர்ந்து கொள்ளுகிறோம்.

அதேபோன்று, கல்வியினால் உருவெடுக்கும் ஆற்றலைக் கொண்டு, அக்கல்வி கற்றவர், மற்றவர்களை தம் பால் ஈர்த்துக் கொள்ளுவதையும், பற்றுக் கொள்ள வைப்பதையும் நாம் கண்டு வருகிறோம்.

ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்தில், ஆங்கிலம் கற்றவர், மற்ற மொழி கற்றவரினும் ஆற்றலுடையவர்களாகக் காணப்பெற்றனர். மற்ற மொழிகளைக் கற்றுள்ளதினால் அமைந்திருந்த ஆற்றலைவிட, அரசமொழியாக இருந்த ஆங்கில மொழியைக் கற்றவர்களுக்குத் தனித்த ஆற்றல் அமைந்திருந்தது. அதன் விளைவாக, மற்ற மொழி கற்றவர்களைவிட, ஆங்கில மொழி கற்றவர்களுக்குத் தனிச் சிறப்பு தானாகவே ஏற்படலாயிற்று.

ஆங்கில மொழி கற்றிருந்ததின் காரணமாக, அம்மொழி கற்றவர்கள் சொல்லுக்கு அரசாங்கத்தில் தனிச் செல்வாக்கு ஏற்படலாயிற்று. அதன் பலனாக, மற்றமொழி கற்றவர்களால் பெற முடியாத ஏற்றத்தை, ஆங்கிலம் கற்றிருந்தவர்களால் மிக மிக எளிதாகப் பெறமுடிந்தது. பின்னர் காலப்போக்கில் அதுவே பொது விதியாயிற்று.

ஆங்கிலம் கற்றவர்கள் ஒரு புதிய பலத்தைப் பெற்றவர்களாகவும், அதைக் கற்காதவர்கள் அப்புதிய பலத்தைப் பெறாதவர்களாகவும் கருதப்படலாயினர். அக்கருத்தின் நன்மை தீமையை, இருசாராரும் சமமாக அனுபவிக்கும் கட்டாயத்துக்கு ஆளாகினர்.

இன்று, ஆங்கிலம் அகற்றப்பட்டு, அதனிடத்தில் இந்தி நுழைக்கப்படும் முயற்சி தீவிரமாக்கப்பட்டிருக்கின்றது. அம்முயற்சி வெல்லுமானால், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தாய்மொழி கற்றிருந்தவர்களுக்குக் கிடைத்துவந்ததுபோன்ற இழிநிலை, மீண்டும் தாய் மொழி கற்றவர்களுக்கு ஏற்படுவது நிச்சயம்.

இந்தி கற்றிருப்பவர் ஏற்றம் பெறுவர்—தாய் மொழி மட்டுமே கற்றவர் ஒதுக்கித் தள்ளப்படுவர்.

இந்தி கற்றவர் ஆதிக்கம் செய்வர்—தாய்மொழி மட்டுமே கற்றவர் ததிங்கிணதோம் போடுவர்.

இந்தி கற்றவர் தாளாளி ஆள்வர்—தாய்மொழி கற்றவர் தரைமட்டமாகி நலிவர்.

இந்தி காலப்போக்கில் நாட்டு மொழியாகும்—தாய் மொழி வீட்டு மொழியாக்கப்பட்டு, நாளடைவில் ஏட்டு மொழி அளவிற்கு வந்து ஒடுங்கிவிடும். எனவே, இந்திக்கு எதிராக நாம் கிளர்ந்தெழ வேண்டும். போர்க்கொடி உயர்த்த வேண்டும்.

இதோ மாணவர் உலகம் வழிகாட்டக் கிளம்பிவிட்டிருக்கிறது.

முதல் முதலாகக் குடந்தை கல்லூரி மாணவர்கள், இந்திக்கு எதிராகக் குரல் எழுப்பினர். அதன் பின்னர் மதுரை, விருதை, சென்னை என்று வரிசையாக மாணவர் உலகம் இந்திக்கு எதிராகக் குரல் கொடுத்து இருக்கின்றது.

இந்தித் திணிப்பின் உள்ளடக்கமாக உள்ள கேடுகளை நன்கு தெரிந்திருப்பவர்கள் மாணவர்களேயாவர் எனவே, தெரிந்திருப்பவர் பொதுவாக நாட்டுக்கும் குறிப்பாகத் தம் தாய் மொழிக்கும் ஆற்ற வேண்டிய தம் கடமையை ஆற்றியுள்ளது கண்டு, மாணவமணிகளை தமிழ் மக்கள் அனைவரும் பாராட்டத்தான் செய்வர். பாராட்டுகின்றனர் — நாமும் பாராட்டுகிறோம்.

சேலம் மாக்னசைட்!

வெட்டியெடுத்துப் பயன்படுத்த ஒரு பொது நிறுவனமாம்;

சென்னை, செப். 4.—மத்திய அரசாங்க இரும்பு, எஃகு அமைச்சர் இலாகாவும் சென்னை அரசாங்கமும், பர்ன் அண்டு கம்பெனியும் ஒன்றாக இணைந்து சேலம் மாவட்டத்தில் உள்ள 'மாக்னசைட்' கனிப்பொருளை தொடர்ந்து எடுப்பதற்கு பொது நிறுவனமொன்றைத் துவங்குவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது,

இதற்கான ஆக்க வேலைகள் பற்றி டில்லியில் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றனவாம்!

சென்னை, செப். 4—சென்னை மாநிலத்தில் உள்ள அரிசிப் பற்றாக்குறையை ஈடு செய்ய குறைந்தது 3,00,000 டன் அரிசி தேவைப்படும் என்று மத்திய அரசாங்கத்திடம் சென்னை வற்புறுத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

ஆதிக்கம் செலுத்துவதற்குக் காரணம் என்ன?

அமைதி நிலவச் செய்வதில் அவர்களுக்கும் ஆசைதானும்!

பெரு, செப். 5—அல்சீரிய மக்கள் தங்கள் தாயகம் விடுதலைபெற வேண்டி பிரெஞ்சு இராணுவத்தை எதிர்த்துப் போராடிவருவது தெரிந்ததே.

பிணக் குவியல்களைக் கண்டு பூரித்துவரும் பிரெஞ்சு அரசாங்கத்தின் வெளிநாட்டு அமைச்சர் பினே, ஒரு அரபுநாட்டு நிருபருக்குப் பேட்டியளித்த போது, 'பிரெஞ்சு அரசாங்கம் அல்சீரியாவில் தொடர்ந்துள்ள போரை, நீடித்து நடத்த விரும்பவில்லை' என்று வேடிக்கையாகக் கூறியுள்ளார்.

அல்சீரியாவில் அமைதி நிலவச் செய்யவேண்டும் என்பதில் பிரெஞ்சுக்கும் ஆசைதானும்!

அல்சீரிய நாட்டுமக்களின் நலனைக் கருதியே பிரான்ஸ் அந்த நாட்டில் ஆதிக்கம் செலுத்துகிறதாம்!

பட்டப் படிப்புக்கு மாணவர்கள் பஞ்சமா?

கல்லூரி முதல்வர்களுடன் அமைச்சர் கலந்தாலோசிப்பார்

சென்னை, செப். 5—கல்லூரிகளில் மூன்றாண்டு பட்டப்படிப்பு நடைபெறும் விதம் குறித்தும், அதற்குப் போதிய அளவு மாணவர்கள் சேராதிருப்பது குறித்தும் விவாதிப்பதற்காக கல்வியமைச்சர் சுப்பிரமணியம், கல்லூரித் தலைவர்கள் (பிரின்சிபால்) அடங்கிய கூட்டமொன்றைக் கூட்ட ஏற்பாடு செய்திருக்கிறார்; இக்கூட்டம் செப். 13-ந் தேதி நடைபெறும்.

இந்த மூன்றாண்டுப் பட்டப் படிப்பு வகுப்புகளில் சுமார் 60 சதவிகித இடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளனவாம். இடங்களின் எண்ணிக்கைக்குரிய அளவு விண்ணப்பங்கள் மாணவர்களிடமிருந்து வாராததே இதற்குக் காரணமாம்.

இந்த ஆண்டுமட்டும் இந்த நிலை ஏற்பட்டதற்குக் காரணம் என்ன; இதே நிலை மேலும் நீடிக்காமலிருக்க என்ன செய்ய வேண்டும் என்பன பற்றி கல்லூரி முதல்வர்களுடன் கல்வியமைச்சர் கலந்தாலோசிப்பார்.

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தரும் இம்மாநாட்டில் கலந்துகொள்வார்.

ஏழைகளுக்கு இலவச சட்ட உதவி!

திருவனந்தபுரம், செப். 5—திங்கள்தோறும் ரூ. 100-க்கு அதிகமில்லாத அளவிற்கு வருமானம் உள்ளவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இலவசமாக சட்ட உதவி அளிப்பதற்கான வகையில் கேரள சர்க்கார் ஓர் அறிக்கை விடுத்துள்ளது; அதற்கான விதிகளை தனது அறிக்கையில் வெளியிட்டுள்ளது.

கேரளத்திற்கு மற்றொரு பொறியியல் கல்லூரி!

சென்னை, செப். 5—கேரள மாநிலத்தில் திருவனந்தபுரத்தில் ஏற்கெனவே ஒரு பொறியியல் கல்லூரி உள்ளது.

1956-ம் ஆண்டு நவம்பர் திங்களில் மற்றொரு பொறியியல் கல்லூரி வேண்டும் என்று கோரப்பட்டது; இதன்படி அகில இந்திய தொழில் நுணுக்கக் கல்விக் குழு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கேரள மாநிலத்தில் அடுத்த கல்வி ஆண்டு முதல், மற்றொரு பொறியியல் கல்லூரியை ஆரம்பிக்க அனுமதியளித்துள்ளது.

இந்த ஏற்பாட்டிற்கு மத்திய அரசாங்கமும் அனுமதியளித்துள்ளது.

அச்சத்தை அதிகரிக்கும்; ஐக்கியத்தை சீர்குலைக்கும்'

'ஆட்சிமொழிப் பிரச்சினையில் பெரும்பான்மை பலத்தை நாடுவது அறிவுடைமையாகாது'

'இந்தி பேசாத மக்களின் நிலைகுறித்து மொழிக் கமிஷன் அக்கறை காட்டத் தவறிவிட்டது'

பண்டித நேருவிடம் தென்னாட்டுக் காங்கிரஸ் எம். பி.-க்கள் முறையீடு

"ஆட்சி மொழிப் பிரச்சினையில் பெரும்பான்மை (மெஜாரிட்டி) பலத்தைக்கொண்டு முடிவெடுக்க முயல்வது அறிவுடைமையாகாது. உண்மையில் சிறுபான்மையோரின் அச்சத்துக்கும் நம்பிக்கைக்குமே முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும்.

"நாட்டின் ஐக்கிய உணர்ச்சி பெருக வேண்டுமென்கிற பிரதம அமைச்சரின் அவா நிறைவேற வேண்டுமானால், பல்வேறு பிரிவு மக்களும் ஒருவருக்கொருவர் தாமாகவே ஈர்க்கப்படும் வகையில் சூழ்நிலை உருவாக வேண்டும்; எதையும் ஒரு பகுதி மக்கள்மீது மற்றொரு பகுதியினர் திணிக்கவில்லை என்ற உணர்வு மக்களிடையே ஏற்பட வேண்டும்.

"இந்திமொழி விஷயத்தில் எடுக்கப்படும் எந்தவித அவசர நடவடிக்கையும் அச்சத்தை அதிகரித்து, நாட்டின் ஐக்கியத்தை நிரந்தரமாகக் குலைக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திவிடும்.

"இந்திய அரசியல் சட்டம் 1950-ம் ஆண்டுதான் நடைமுறைக்கு வந்தது. அதற்கு முன்பே படித்து முடித்துவிட்டவர்கள் இந்தியைக் கற்க வாய்ப்பில்லை. எனவே, இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டிராதவர்கள் அரசாங்கத்திலோ, பாராளுமன்றத்திலோ திறம்படப் பணியாற்ற இயலாது. பிரிட்டிஷ் அரசாங்கம்கூட ஆங்கிலத்தை முதன் முதலில் அமுல் நடத்துவதற்குமுன் 50 ஆண்டுக்காலம் தவணை எடுத்துக் கொண்டது. எனவே, 1990 வரை இந்தியை அமுல் நடத்தக்கூடாது என்று கோருவது முற்றிலும் நியாயமானதே."

—இவ்வாறு, தென்னாட்டைச் சேர்ந்த காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களால் பிரதமர் நேருவிடம் கொடுக்கப்படவிருக்கும் மகஜர் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் மாநிலங்களான தமிழ்நாடு, கேரளம், மைசூர், ஆந்திரம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த காங்கிரஸ் எம். பி.-க்களின் கூட்டுமுயற்சியால் மேற்சொன்ன மகஜர் தயாரிக்கப்பட்டுள்ளது.

1,200 சொற்களடங்கிய அந்த மகஜரில், இதுவரை 40 உறுப்பினர்களுக்குமேல் கையொப்பமிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது; மேலும் பலரிடமிருந்து கையொப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன.

இந்தித் திணிப்பை 1990 வரை தள்ளிப்போட வேண்டுமென்று வற்புறுத்துவதே இந்த மகஜரின் நோக்கமாகும்.

இந்தித் திணிப்பு விஷயமாக பார்லிமெண்ட் காங்கிரஸ் கட்சியினரிடையே தனிப்பட்ட கருத்துக்களை அறிந்துகொள்ள வசதி செய்யப்பட வேண்டுமென்றும், அவசியமானால், இரகசிய வாக்கெடுப்பு நடத்தலாமென்றும் நேருவிடம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

"அப்படி இரகசிய வாக்களிப்பு நடந்தால் காஷ்மீர், பஞ்சாப், குசராத், மராட்டியம், கர்னாடகம், கேரளம், தமிழ்நாடு, ஆந்திரம், ஒரிசா, வங்காளம், அசாம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த அத்தனை உறுப்பினர்களும், 1965-க்குள் இந்தி திணிக்கப்படுவதை எதிர்த்தே வாக்களிப்பார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை"

என்று அம்மகஜர் தெரிவித்துள்ளது.

மேலும் அம்மகஜரில் குறிப்பிட்டுள்ளதாவது:—

"ஆட்சிமொழி விசாரணைக்குழு, ஆங்கிலத்தின் இடத்தில் இந்தியைப் புகுத்தும் அதே நேரத்தில் நிர்வாகத் துறையில் சீர்குலைவு ஏற்படாமலும், இந்தி பேசாத மக்களுக்கு எவ்விதத் தீங்கும் ஏற்படாமலும் இருக்க வேண்டுமே என்பதைப் பற்றிச் சிறிதும் சிந்திக்கவில்லை; நாட்டின் பெரும்பாலோருக்கு இருந்துவரும் பெரும் பீதியைப் பற்றியும் அக்குழு தன் கவனத்தைச் செலுத்தவில்லை.

"1965-க்குப் பிறகும், மேலும் ஒரு 25 ஆண்டுகளுக்கு ஆட்சி மொழித் துறையில் இப்பொழுதுள்ள ஏற்பாடே இருந்து வரலாம்."

இந்தியாவிலுள்ள பாகிஸ்தானிகள்

சரியான புள்ளி விவரம் கிடைக்கவில்லையாம்!

புதுடில்லி, செப். 4—இந்தியாவிலுள்ள பாகிஸ்தான் குடிமக்கள் பற்றிய சரியான புள்ளி விவரங்களை இந்திய அரசாங்கத்தினால் சேகரிக்க முடியவில்லை.

அசாம், பம்பாய், டில்லி, இமாலயப் பகுதி, ஜம்மு, காஷ்மீரம், கேரளம், சென்னை, மைசூர், இராஜஸ்தான், மேற்கு வங்கம், அந்தமான், நிகோபார் தீவுகள் ஆகிய இடங்களில் உள்ள பாகிஸ்தான் குடிகளின் எண்ணிக்கை டில்லி அரசாங்கத்திற்குக்கிடைக்கவில்லையாம்!

மற்ற மாநிலங்களில் மொத்தம் 4,737 பாகிஸ்தானிகள் மட்டுமே உள்ளனராம்.

இவர்களில் 404 பேர்கள், இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

திருப்பூர் பனியன் தொழிலாளர் குறைகள்

முதலமைச்சரிடம் தி. மு. கழகத்தினர் முறையீடு

18—8—57-ல், திருப்பூர் வந்த முதலமைச்சர் காமராசர் அவர்களை மாலை 3-30 மணிக்கு திருப்பூர் முசாபரி பங்களாவில் தி. மு. கழகத் தோழர்கள் எ. கோவிந்தசாமி எம். எல். ஏ.; சு. துரைசாமி, என். பால்ராஜ், கே. பழனிசாமி, செகன்னுதன், இரா. பாலசுந்தரம் ஆகியோர் சந்தித்து, 14 கோரிக்கைகள் கொண்ட ஓர் மகஜரைப் பனியன் பேக்டரி தொழிலாளர் கழகத்தின் சார்பில் கொடுத்து, அக்கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டனர்; முதலமைச்சர் ஆவன செய்வதாகக் கூறினர்.

கல்கத்தா, செப். 4—பெண்கள் விடுதியிலிருந்து 22 பெண்கள், காவற்காரரைத் தாக்கிவிட்டு தப்பி ஓடிவிட்டனராம். போலீசார் அவர்களைக் கைது செய்தனராம்.

'சுதந்திரப் பயண'த்தில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டதற்கு காரணம்?

சி. பி. சிற்றரசு தெளிவாக்குகிறார்

"அண்மையில், 'இந்திய சுதந்திர நூற்றாண்டு விழா' என்னும் பெயரால் ஏராளமாகப் பணம்செலவிட்டனர். இதையொட்டி, 'சுதந்திரப் பயணம்' என்ற பெயரில் ஒரு திரைப் படம் எடுத்து வெளியிட்டிருக்கிறது டில்லி அரசாங்கம்! அந்தப் படத்தில், தென்னாட்டைப் பற்றி ஒன்றுமே காட்டப்படவில்லை. இது எதற்கு என்றால். உண்மை வரலாற்றை மறைத்து, அதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கே ஆகும் 'சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவரனைவரும் வடநாட்டினரே; தென்னாட்டவர் சிறிதும் பங்கெடுத்துக்கொள்ளவில்லை' என, வருங் காலத்தில் சரித்திரம் தீட்டப்படும். அதற்கு அப்பொழுது எதிர்ப்பு கிளம்பினால், உடனே, 'நாங்கள் கூறுவதுதான் உண்மை; இதை அப்பொழுதே நாங்கள் திரைப்படமெடுத்துக்காட்டினோம்; அப்பொழுது தென்னாட்டவர் எவரும் அதை எதிர்க்கவே இல்லை; அவர்கள் எதிர்க்கவில்லை என்பதே எங்கள் கூற்றுக்கு ஆதாரம்' என்று வருங்காலத்தில் கூறுவார்கள் வடநாட்டுக்காரர்கள்!

"டில்லியின் இந்தச் சதிச் செயலை எங்களைத் தவிர இங்குள்ள வேறு யார் எதிர்க்கிறார்கள்? சுதந்திரப் போராட்டத்தில் தென்னாடு தியாகமே செய்யவில்லையா? இதைக் கேட்கத் தைரியமில்லாத மந்திரிகள், நாம் கேட்கும்போதாவது மகிழ்கிறார்களா? அதுவுமில்லை! நாம் கேட்கிறோம் என்பதையாவது டில்லிக்கு எடுத்துச் சொல்கிறார்களா? அதுவுமில்லை."

—இவ்வாறு, தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள், சென்னை—புதுவண்ணையில், அண்ணா படிப்பகச் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் சொன்னார் :—

"தென்னாடு எந்த அன்னியராலும் கைப்பற்றப்படாத நாடு; அசோகன், அலெக்சாண்டரெல்லாம் நுழையாத நாடு; இதை, இன்று வடநாட்டான் ஆளுவதை நாம் எப்படிச் சகித்துக்கொண்டிருக்க முடியும்? இந்தியாவுக்குள் நுழைந்த அன்னியருக்கெல்லாம் வடநாடுதான் வழிவகுத்துத் தந்தது. ஜீலம் நதிக்கரையிலே 3000 பசுக்களின் கன்றுகளைக் கொன்று கறி சமைத்து, 3.000 மதுக் குடங்களைப் படைத்து, பூர்ணகும்பம் வைத்து, அலெக்சாண்டரை வரவேற்றான் மாபாதகன், அம்பி என்னும் அரசன்.

"வெள்ளையனை விரட்டியது ஆயுதத்தால் அல்ல; காங்கிரசாரின் பட்டினிப் போராட்டத்தாலுமல்ல! ரஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய மூவல்லரசுகளுக்கும் ஏற்பட்ட அட்லாண்டிக ஒப்பந்தத்தின் விளைவுதான் இந்தியாவை விடுதலைபெறச் செய்தது."

'இந்தி வெறியர்'கள் மனப்போக்கு!

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள், மேலும் ஆட்சியாளரின் இந்தித் திணிப்புக் கொள்கையையும், 'இந்தி வெறியர்'களின் தான்தோன்றித்தனமான மனப்போக்கையும் குறிப்பிட்டுப் பேசியதாவது :—

"இப்பொழுது இந்தியைத் திணிக்க மும்முரமாக வேலை செய்துவருகின்றனர் வடநாட்டார். இந்த நேரத்தில எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது; ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு ஓ. வி. அளகேசன், இந்தித் திணிப்பை வன்மையாகக் கண்டித்து அரசியல் நிர்ணய சபையில் பேசினார்; இந்தித் திணிப்பை 'சாவனிசம்' என்றார். 'சாவன்' என்னும் வெறியனைக் குறிக்கும் சொல்லே 'சாவனிசம்' என்பது. அப்பொழுது பார்லிமெண்டிலிருந்த இந்தி வெறியான தாண்டன், சீறிஎழுந்து, அழகேசனை அடிக்கவருவதுபோல நெருங்கினார்; அடித்தேவிடுவார் போலிருந்தது; உடனே சபாநாயகர் இடைமறித்துத் தடுத்தார்; அவர் தடுத்திராவிட்டால், அழகேசனை அடித்தேயிருப்பார், தாண்டன்; அவ்வளவு வெறி தாண்டனுக்கு!

"ஆனால் அதே அழகேசன் இன்று வடவரோடு சேர்ந்துகொண்டு இந்தியை ஆதரிக்கிறார்.

"அதே பார்லிமெண்டில் நமது தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், இந்தியை எதிர்த்துக் கண்டன முழக்கம் செய்திருக்கிறார். அவரது பேச்சைக் கேட்டதும் சபையிலிருந்த பலரும் வியப்புக்கும், அச்சத்துக்கும் உள்ளாகியிருக்கின்றனர். அன்று அழகேசனுக்கு ஏற்பட்ட நிலை இன்று சம்பத்துக்கும் ஏற்பட்டிருக்குமானால், நிலைமை வேறாக மாறிவிட்டிருக்கும்.

"நாம் விடுதலை இயக்கத்தினர்; நமது சக்திபெரிது; இதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

"38 கோடி மக்களின் 'தலைவிதி'யை நிர்ணயிக்கும் சபை தான் பார்லிமெண்டு; அங்கு, நம் நாட்டு உறுப்பினர்களில் யாரேனும் தமிழில் பேசினால் கூச்சல் போடுகிறார்களாம், நாகரீகம் தெரியாத வடநாட்டுக்காரர்கள்!

"எனவேதான் நாம், 'சரித்திரத்தைத் திருப்பி எழுதுவோம்' என்கிறோம்; 'காட்டுமிராண்டி' மனப்போக்கு உள்ளவர்களுடன் நமக்கு உறவு வேண்டாம் என்கிறோம்.

"'தென்னாட்டினராகிய' நாங்கள் இந்தி கற்கமுடியாது; அதே நேரத்தில், இந்தி கற்காவிடில் உத்தியோகம் கிடையாது என்று நீங்கள் சொல்லவும் முடியாது' என்று ஆட்சியாளருக்கு அறைகூவல் விடுக்கின்றேன்.

"உயர்தனிச் செம்மொழி என உலகோரால் போற்றப்படும் தமிழ்—'எதன் உதவியுமின்றி தனித்தியங்கக்கூடிய ஆற்றல் பெற்றது' என்று கால்டுவெல் போன்ற மேலைநாட்டு அறிஞர்களால் பாராட்டப்பட்ட தமிழ்—எங்கள் தாய் மொழியாக இருக்க அதை நாங்கள் எப்படி விட்டுவிட முடியும்?

"முன்பு சமஸ்கிருதம் நுழைந்ததால் ஏற்பட்ட தீங்கு போதாதென்று, ஆங்கிலம் புகுந்து தமிழை ஒரே கலப்புமயமாக்கிவிட்டது. சாதாரணப் பேச்சு வழக்கில்கூட ஆங்கிலச் சொற்களையும் சமஸ்கிருதச் சொற்களையும் கலந்து, தமிழைக் குலைக்கிறார்கள் மக்கள். இந்த நிலையில் இந்தி புகுந்தால் என்ன ஆவது?

"இப்பொழுது எதில் பார்த்தாலும் ஆட்சியாளர் தங்கள் இஷ்டம் போல இந்தியைத் திணிக்கிறார்கள். தபால் கார்டிலும், மணியார்டர் கூப்பனிலும் இந்தியைத் திணிக்க வேண்டும் என்று எப்பொழுது தீர்மானம் போடப்பட்டது?

கடன் வாங்கித்தான் ஆட்சி நடைபெற வேண்டுமா?

"'தமிழ் நாடு' என்று பெயர் வைத்தால் வெளிநாட்டிலிருந்து கடன் கிடைக்காதாம்; 'சென்னை' என்றிருந்தால்தான் கடன் கிடைக்குமாம்—மந்திரி பக்தவத்சலம் கூறுகிறார். வெளிநாட்டுக்கும் பக்தவத்சலத்துக்கும் என்ன சம்பந்தம்? சென்னை எதற்காக வெளிநாட்டில் கடன் கேட்க வேண்டும்? கடன் வாங்கியே காலங்கழிக்க வேண்டிய நிலை எதற்கு? கடன்வாங்குதற்காக சொந்தப் பெயரை விட்டு வேறு பெயரை லவத்துக்கொள்ள வேண்டுமா? மந்திரி பக்தவத்சலம் எந்த நாட்டில் போய்த் தமிழ்நாட்டின் பெயரால் கடன் கேட்டு, இல்லையென்று சொல்லிவிட்டார்கள்?

"கடன் கேட்டு வாங்கி ஆட்சி நடத்தும் நாட்டின் இலட்சணம் தான் புரிகிறதே! ஏழை நாடான இந்தியாவிலிருந்து தூதராக இங்கிலாந்துக்குச் சென்றிருக்கும் நேருவின் தங்கையான விஜயலட்சுமி பண்டிட்டுக்கு லண்டனில் 11 கார்கள் இருக்கின்றனவாம்; அவை அத்தனையும் மிக விலை உயர்ந்த கார்களாம்; அவற்றைப் பராமரிக்கும் செலவு மட்டும் ஆண்டுக்கு ரூ. 8,000-க்கு மேல் ஆகிறதாம்! ஏழை நாடு செய்யக் கூடியதா இது?

"சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதாகக் கூறி, பண்டித நேரு ஆடம்பரமான மாளிகையைத் துறந்து, சிறிய வீட்டுக்குக் குடிபோகப் போவதாக விளம்பரப்படுத்தப்பட்டது; இப்பொழுது அதுவும் இல்லை; நேரு, மாளிகையிலேயே இருப்பார் என்று கூறப்படுகிறது.

'அப்பாவிகள் - வடவர் சொற்படி ஆடக்கூடியவர்கள்!'

"ஏதோ, இவர்கள்தான் வெள்ளைக்காரனை விரட்டிவிட்டதாகவும், நீதிக்கட்சியைச் சேர்ந்தவர்களெல்லாம் வெள்ளையனுக்குக் 'கால்வருடிகள்' என்றும் இன்று பேசுகிறார்கள். நீதிக் கட்சியினர் செய்த எந்தச் செயலை இவர்கள் நாட்டுக்குத் தீங்கு எனக் கூற முடியும்? ஏதாவது எடுத்துக் காட்டட்டும்! வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை நீதிக்கட்சியார் கொண்டுவராவில்லையானால் இன்று தமிழர் சமுதாயம் இந்த அளவுக்காவது முன்னேறியிருக்க முடியுமா? நீதிக் கட்சித் தலைவர்களைப் பற்றி எந்த முறையில் குற்றஞ்சாட்ட முடியும்?

எனவே காங்கிரஸ்காரர்களின் முன்னுக்குப்பின் முரணான பேச்சுக்களை நம்பவேண்டாம். அவர்கள் அப்பாவிகள்—வடநாட்டான் சொல்லியபடி ஆடக்கூடியவர்கள்.

"நமக்கென ஒரு தனி நாடு பெற்று, நம் சொந்த ஆட்சியை நிறுவ வேண்டும். அந்தக் காலம் வெகு தொலைவில் இல்லை. அந்த இன்பத் திராவிடத்தை அடைய அண்ணா தலைமையில் நாம் கண்ணியம், கட்டுப்பாடு, கடமை தவறாமல் பணிபுரிவோமாக.

180 இலட்சம் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி

ஆந்திரத்தின் திட்டத்திற்கு டேல்லியின் உதவி

புதுடில்லி, செப். 4—

180 இலட்சம் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதியளிக்கக் கூடிய 17 திட்டங்களுக்கு ஆந்திர மாநிலம் ரூ. 6½ கோடி செலவிட முடிவு செய்துள்ளது.

இதற்காக மத்திய அரசாங்கத்திடம் ரூ. 30 இலட்சம் கேட்டு பெற்றுள்ளதாம்.

ஆந்திர மாநிலத்தின் வறண்ட பகுதிகளில் இந்தத் தொகையைக் கொண்டு திட்டங்கள் நிறைவேற்றப்படுமாம்.

'பட்டாசுகள் போக்குவரத்து தடை! நீக்கவோ, தளர்த்தவோ இயலாது'

மக்கள் சபையில் அமைச்சர் அறிவிப்பு

புதுடில்லி, செப். 5—

சென்னை மாநிலத்தில் சிவகாசியில் தயாரிக்கப்பட்ட வெடி மருந்துகள், நாட்டின் மற்ற எந்தெந்தப் பகுதிகளுக்கு அனுப்பப் பட்டுள்ளனவோ அவற்றைக் கண்டறிந்து, பரிசீலனை செய்து முடிக்கும்வரை இந்திய இரயில்வே மூலம் வெடி மருந்துகள் அனுப்ப விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கவோ, தளர்த்தவோ இயலாதென நேற்று மக்கள் சபையில் பண்டித நேருவும், இரயில்வே அமைச்சர் ஜெகசீவன்ராமும் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் அசன்சால், காட்பாடி, கான்பூர் முதலிய புகைவண்டி நிலையங்களில் வெடி விபத்துக்கள் ஏற்பட்டது தெரிந்த ஒன்றாகும். இந்த விபத்துக்களைப் பற்றிய விசாரணை முடிந்து, முடிவுகள் கிடைத்த பின்னரே இரயில் மூலம் வெடி மருந்துகள் அனுப்புவது பற்றி இந்திய அரசாங்கம் முடிவு செய்யும் என்று தெரியவருகிறது.

வெடி விபத்துக்களைப் பற்றி விவாதிக்க அனுமதி வேண்டும் என்று கோரி, எட்டு உறுப்பினர்கள் மக்கள்சபையில், ஒத்திவைப்புப் பிரேரணைகள் கொண்டுவந்தனர். செப்டம்பர் 11-ந் தேதியன்று மக்கள்சபையில் வெடி விபத்துக்கள்பற்றி விவாதம் நடைபெறும் என்று அவைத் தலைவர் அறிவித்துள்ளார்.

'ஆங்காங்கு முடக்கிவைக்கப் பட்டுள்ள பட்டாசுகளை தீபாவளியை முன்னிட்டு விடுவிக்குமாறு சிவகாசி பட்டாசு உற்பத்தியாளர்கள் கேட்டுக்கொண்டிருப்பதால், அந்த சரக்குகள் விடுவிக்கப்படுமா?' என்று ஒரு உறுப்பினர் கேட்டதற்கு நேரு பதிலளித்ததாவது :—

"சிவகாசியைப் பொறுத்தமட்டில் அங்கிருந்து இனி பட்டாசு எதுவும் வெளியிடங்களுக்கு அனுப்பப்படமாட்டாது; சிவகாசியிலிருந்து ஏற்கனவே அனுப்பப்பட்டிருக்கும் பட்டாசு பார்சல்கள் எங்கு போய்க்கொண்டிருந்தாலும் அவற்றைக் கண்காணிக்க இரயில்வே அமைச்சர் எல்லாவகை ஏற்பாடுகளும் செய்வார்."

★

'தடையை நீக்க வற்புறுத்துக'

சென்னை சர்க்காருக்கு பட்டாசு உற்பத்தியாளர் மகசர்

சென்னை, செப். 5—

"பட்டாசு போன்ற வெடி மருந்துகள் இரயில்மூலம் செல்லுவதற்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையின் காரணமாக, சிவகாசியிலுள்ள வெடிமருந்து உற்பத்தியாளர்கள் பெருத்த நஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கின்றனர்.

"இதனால், வெடிகள் அதிகம் விற்பனையாகக் கூடிய தீபாவளி பண்டிகை காலத்தில் தங்கள் தயாரிப்புக்களை விற்க இயலாமற் போய்விடுமோ என்ற அச்சத்தால், பெரும்பாலான உற்பத்தியாளர்கள் தங்கள் தொழிற்சாலைகளை மூடிவிட நேரிடக்கூடும்; அதன் விளைவாக சுமார் 2 இலட்சம் தொழிலாளர்கள் வேலையிழக்க வேண்டிவரும்.

"போக்குவரத்தின்போது சரக்குகள் முரட்டுத்தனமாகக் கையாளப்படுவதாலேயே சில நேரங்களில் விபத்துகள் ஏற்படுகின்றன. இதற்காக உற்பத்தியாளர்களைத் தண்டிக்கும்படியான செயல் ஆகாது.

"எனவே, தவக்கமின்றி, வெடிமருந்து போக்குவரத்துக் தடையைத் தளர்த்த வேண்டுமென டில்லி சர்க்காரை, மாநில சர்க்கார் வற்புறுத்த வேண்டும்"

—இவ்வாறு, நேற்று சிவகாசி செம்பகம் வாணத்தொழிற்சாலை சார்பில் நிதியமைச்சர் சுப்பிரமணியம் அவர்களிடம் அளிக்கப் பட்ட ஒரு மகசரில் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

டில்லிக்குத் தூது

வெடி மருந்துகள் போக்குவரத்துக்கான தடையை நீக்க வேண்டுமென இந்திய சர்க்காரை கேட்டுக்கொண்டு வற்புறுத்துவதற்காக, சிவகாசி வாணத் தொழிற் சங்கச் செயலாளர் திரு. செல்லத்துரை தலைமையில் 8 பேர் கொண்ட தூதக்குழுவொன்று டில்லிக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளது.

'அவதியுறும் நெசவாளர்களுக்கு கடன் தந்து உதவுக'

சேலம் மாவட்ட கூட்டுறவு நெசவாளர் மாநாட்டில் கோரிக்கை

சேலம், செப். 3—

சேலம் மாவட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சம்மேளன மாநாடு 29—8—57ல், சேலம் கூட்டுறவு 'ரெஸ்ட்ஹவுஸ்' கட்டிடத்தில் நடந்தது. மாநாட்டிற்கு சேலம் மத்திய கூட்டுறவு பாங்கித் தலைவர் கே. எஸ். சுப்பிரமணியம் (கவுண்டர்) எம்.எல்.ஏ. தலைமை வகித்தார்.

சேலம் மாவட்டத்தில் ஒரு ஆண்டுக்கு மொத்தம் சுமார் 3 கோடி கெசம் கைத்தறித் துணி உற்பத்தியாகும் என இந்தியப் பேரரசினருக்கு சென்னை மாநில கைத்தறி இலாகா டைரக்டர் எழுதியிருப்பதாகவும், ஆகவே கைத்தறி துணியின் உற்பத்தியை கணிசமான அளவிற்கு உயர்த்த வேண்டும் என்றும், எதிர் பார்த்த அளவிற்கு கைத்தறித் துணி உற்பத்தி அதிகரிக்காவிட்டால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கைத்தறிக்கு ஒதுக்கப்படும் அளவில் இருந்து ஒரு பகுதியை ஆலைக்கும், விசைத்தறிகளுக்கும் ஒதுக்க நேரிடும் என்றும் தலைவர் குறிப்பிட்டார்.

சேலம் வட்டார கைத்தறி இலாகா உதவி ரிஜிஸ்திரார் பி. டி. சிரோமணி, தர்மபுரி வட்டார கூட்டுறவு இலாகா உதவி ரிஜிஸ்திரார் பண்டாரி மார்க்கெட்டிங் அதிகாரி லோகநாதன் மற்றும் பல நெசவாளர் சங்க பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளைத் தேக்கவிடாமல் கூட்டுறவு இலாகா மார்க்கெட்டிங் அதிகாரி கொள்முதல் செய்துகொள்ளவேண்டும் என கே. கே. ராம்தாஸ் கூறினார்.

தீர்மானங்கள்

ஒவ்வொரு நெசவாளர் கூட்டுறவு சொசைடியும் ஒரு மாதத்திற்குக் குறைந்தபட்சம் 20-ம் நெம்பர் நூலில் 125 கெசமும், 30, 40-ம் நெம்பர் நூலில் 120 கெசமும், 60-ம் நெம்பர் நூலில் 100 கெசமும், 80, 100-ம் நெம்பர் நூலில் 80 கெசமும், 120-ம் நெம்பர் நூலில் 65 கெசமும் (கைத்தறி) துணிகளை உற்பத்தி செய்யவேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

அவதியுறும் நெசவாளர்களுக்கு கடன்களைக் கொடுத்துதவுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

சொசைடிகளில் அதிகமான அளவிற்கு கைத்தறித் துணிகளை நெய்யும் நெசவாளர்களுக்கும், நல்ல ரகங்களை தயார் செய்யும் நெசவாளிகளுக்கும் சொசைடிகள் பரிசுகள் வழங்கலாம் என மாநாடு கருத்துத் தெரிவித்தது. (ந—நி)

கலைவாணருக்கு நினைவுச் சின்னம்

குடும்பப் பொருளாதார நிலையை ஆராய குழு நியமனம்

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் முடிவுகள்

சென்னை, செப். 6—
கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் உருவச் சிலையை மவுண்ட் ரோடில் எட்வர்டு எலியட்ஸ் ரோடு சந்திக்கும் இடத்தில் (ஜெமினி ஸ்டுடியோ எதிரில்) அமைக்கும் பொருட்டு, அதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு செயலாற்ற சங்கப் பொதுச் செயலாளருக்கு அதிகாரம் அளித்து 4—9—57-ல் நடைபெற்ற தென்னிந்திய நடிகர் சங்க அவசரச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கலைவாணரின் குடும்பம் சம்பந்தமான பொருளாதார நிலைமைகளை விசாரித்தறிந்து தெளிவுபடுத்தி அறிக்கை ஒன்றை அளிப்பதற்கென திருவாளர்கள் கே. சுப்பிரமணியம், எம். ஜி. இராமச்சந்திரன், எஸ். எஸ். இராசேந்திரன், டி. கே. சண்முகம், வெங்கடரமணி ஆகியோரைக் கொண்ட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

கலைவாணரின் மறைவு குறித்து, துயருறும் பொதுமக்களுக்கும், கலையுலகிற்கும், கலைவாணரின் குடும்பத்தாருக்கும் தெ. இ. நடிகர் சங்கச் சார்பில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

தெ. இ. நடிகர் சங்கச் சார்பில் வருகிற 7—9—57-ல் முதலமைச்சர் தலைமையில் ஓர் அனுதாபப் பொதுக்கூட்டம் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தெ. இ. நடிகர் சங்கச் சார்பில் அதிகாரபூர்வமான அறிக்கை வெளியிடப்படும்வரை பொதுமக்களில் யாரும் கலைவாணரின் பெயரால் நிதி திரட்டவோ, டைரக்டர் கே. சுப்பிரமணியம் அவர்களின் அறிக்கைப்படி சங்கத்தின் செயலாளர் பெயருக்குப் பணம் அனுப்பவோ வேண்டாமென சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

கலைவாணரின் இறுதிப் பயணத்தின்போது, அதைத் திரைப்படமாக எடுத்தவர்கள், தாங்கள் எடுத்த படத்தை வியாபார முறையில் தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்காமல், கலைவாணர் சம்பந்தமாக சங்கம் எடுத்துக்கொண்டுள்ள நன்முயற்சிக்குப் பயன்படும்வகையில் அன்பு கூர்ந்து கொடுத்து உதவுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

போட்டிச் சங்கம் ஏற்பட்டதன் விளைவு

தொழிலாளர் மோதல்; போலீஸ் தடியடி

ஐதராபாத், செப். 5—
இங்கு, தொழிலாளர்களில் இரு சாராரிடையே ஏற்பட்ட மோதலின் விளைவாகப் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைக்க நேர்ந்தது; இதன் விளைவாக 12 பேர் காயமடைந்தனர்; அவர்களில் நால்வர் பலத்த காயத்துக்குள்ளாகி இருக்கின்றனர். இரு அதிகாரிகள் உட்பட 18 போலீசாருக்குக் காயம்பட்டிருக்கிறது.

இங்கு மின்சார இலாகாவில் 1,600 பேர் பணியாற்றுகின்றனராம்; அவர்களில் 1,300 பேர் அங்கம் வகித்துள்ள தொழிற்சங்கத்தை சோஷலிஸ்டுகள் நடத்தி வருகின்றனராம்.

எஞ்சியுள்ள - 300 பேருக்குக் குறைவாக உள்ள தொழிலாளர்களைச் சேர்த்துக்கொண்டு அ. இ. தொ. சங்கக் காங்கிரஸ் போட்டிச் சங்கம் நடத்திவருகிறதாம்! இந்தச் சங்கத்திற்கு மதிப்புக் கொடுத்து இலவசமாக சங்கத்திற்கான இடமும் தரப்பட்டுள்ளதாம்.

இந்தப் பிற்போக்கான முடிவை யறிந்த பெருவாரியான தொழிலாளர்களின் ஆதரவைப் பெற்றுள்ள தொழிற் சங்கம் தன்னுடைய கண்டனத்தைத்தெரிவிக்க வேலைநிறுத்தம் செய்ததாம்.

ஊர்வலம் அ. இ. தொ. ச. காங்கிரஸ் நடத்திவரும் சங்கக் கட்டிடத்தின் முன்னிலையில் வரும் போதுதான் மோதுதல் ஏற்பட்டு போலீசார் தடியடிப் பிரயோகம் செய்ய நேர்ந்திருக்கிறது.

தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமானால்.......

'கல்லூரிப் பாடமொழியும் தமிழாக இருக்க வேண்டும்'

சென்னை கல்வியமைச்சர் கருத்து

சென்னை, செப். 5—
பல்கலைக் கழகக் கட்டத்தில் தமிழைப் பாடமொழியாக்குவது உள்பட, எல்லா மட்டங்களிலும் உள்ள கல்வித்துறைப் பிரச்சினைகள் குறித்து அக்டோபரில்கூடவிருக்கும் சென்னை சட்டசபைக் கூட்டத்தில் பரிசீலிக்கப்படும் எனத் தெரிகிறது.

தமிழை ஆட்சிமொழியாக ஏற்றுக்கொண்டிருப்பதால் கல்லூரிகளிலும் தமிழைப் பாடமொழியாக்கி, ஏதாவது ஒரு கட்டத்தில் இப்பிரச்சினை தீர்த்துவைக்கப்பட வேண்டியது அவசியம் என்று கல்வியமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

அரசாங்க ஊழியர்களுக்கு பல்கலைக் கழகப் பட்டப்படிப்பு அவசியம் என்று இருக்கும்வரை, தமிழில் ஆட்சி நடைபெறுவதற்கு பல்கலைக் கழகத்திலும் தமிழ் பாட மொழியாக இருக்கவேண்டுமென்று குறிப்பிடுவது இயல்பே என்று அவர் கூறினர்.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி

இந்திய இரயில்வே நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட தூதுக் குழு, இந்திய இரயில்வேக்களுக்குத் தேவைப்படும் இரும்பு, எஃகு 5·22 இலட்சம் டன் அளவுக்கு வெளிநாடுகளிலிருந்து தருவிக்க ஏற்பாடு செய்துள்ளதாம்; இதன் மதிப்பு ரூ. 36 கோடி என்று கூறப்படுகிறது.

அறந்தாங்கி வட்ட

தி. மு. கழகச் செயலாளர்கட்கு;

8—9—57 காலை 11-30 மணிக்கு அறந்தாங்கி தி. மு. க. கட்டிடத்தில், அறந்தாங்கி வட்ட செயற்குழுத் தேர்தல் நடைபெறும்.

அறந்தாங்கி வட்டச் செயலாளர்கள் மட்டுமே தேர்தலில் கலந்துக்கொள்ளலாம்.

சென்னை-புரசை வள்ளுவர் மன்றத் திறப்புவிழா

7—9—57 மாலை 6 மணிக்கு புரசை லாடர்ஸ் கேட் சாலை அருகில், தோழர் ஏ. கே. சாமி தலைமையில் மேற்படி விழா நடைபெறும்; தோழர் க. அன்பழகன் எம். எல். ஏ. மன்றத்தைத் திறந்துவைப்பார். தோழர்கள் டி. நாராயணன், வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோர் பேசுவர். டேப் இராதாமாணிக்கம் இன்னிசை வழங்குவார்.

அரியலூர் அண்ணு இளைஞர்மன்றப் பொதுக்கூட்டம்

7—9—57 மாலை 6 மணிக்கு அரியலூர் பெட்ரோல் பங்க் எதிரிலுள்ள திடலில் தோழர் எம். எஸ். பொன்றுசாமி தலைமையில்மேற்படி பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, இரா. நாராயணன், கோ. சிவபெருமான், எஸ். இராமசாமி ஆகியோர் பேசுவர். மாலை 5 மணிக்கு மன்றத்தில் புதிய கட்டிடத்தை சி. பி. சிற்றரசு திறந்துவைப்பார்.

சென்னை மாநில உயர்தர கல்வி மாநாடு

8—9—57 காலை 10 மணிக்கு, மதுரை விக்டோரியா எட்வர்டு மண்டபத்தில்என். பஞ்சாபகேசன் அவர்கள் தலைமையில் மேற்படி மாநாடு நடைபெறும்; ஆர். சிதம்பர பாரதி மாநாட்டைத் துவக்கி வைப்பார்; டாக்டர் சோமசுந்தர பாரதியார், சௌந்திரம் இராமச்சந்திரன், இலட்சுமிகாந்தம் அம்மையார் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

கோவை 27-வது வட்டம் முத்தமிழ் மறுமலர்ச்சி மன்றம்

8—9—57 காலை 10 மணிக்கு, மேற்படி மன்றத்தின் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்; புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

7—9—57 மாலை 7 மணியளவில், சென்னை-சூளை, ஊ. பு. அ. சௌந்திரபாண்டியனுர் நினைவுப் படிப்பகத்தின் சார்பில், படிப்பக மனையில் ஓர் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்; தோழர் கோதண்டன் தலைமை வகிப்பார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்—அறிக்கை எண்: 8/57

திராவிட நாடு விடுதலை வாரம்

செப்டம்பர் 17-ஆம் நாளிலிருந்து 23-ஆம் நாள்வரை

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 9-வது ஆண்டு துவக்க நாளான 17—9—1957-ஆம் நாளிலிருந்து 23-ஆம் நாள்வரை திராவிட நாடு விடுதலை வாரமாகக் கொண்டாடும்படி ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகளையும் கழகச் சார்புள்ள அமைப்புகளையும் அன்போடு விரும்பிக் கேட்டுக்கொள்கிறேம்.

பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், இலவச இசை—நாடக அரங்குகள் ஆகியவற்றைச் சிறப்போடும் பொலிவோடும் நடத்தி நாட்டுப் பிரிவினைக்கான கருத்து விளக்கம் தருவதுடன், கழகப் போராட்டங்களில் உயிர்நீத்த தோழர்களுக்கு வீரவணக்கமும் செலுத்தக் கேட்டுக்கொள்கிறேம்.

அன்பன்,

4—9—57 'அறிவகம்' சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கழகக் கூட்டங்கள்

★

திருமங்கலம்:
வேலாயுதம் திடலில்
8—9—57 மாலை 6-30 மணிக்கு
தலைவர்: இரசாக்
பேசுவோர்:
காஞ்சி-கல்யாணசுந்தரம்
ஆர். எஸ் பாண்டியன்
க. ம. வ. நடராசன்
ஆர். சே; வேலன்

★

நீடாமங்கலம்:
(சீனிவாசபிள்ளை சத்திரம்எதிரில்)
8—9—57 மாலை 6 மணிக்கு
தலைவர்:
ப. நாராயணசாமி
பேசுவோர்:
கி. மனோகரன்
வ. வீராசாமி
ந. சோமசுந்தரம்
இசை: ந. ஞானசுந்தரம்

★

அனகாபுத்தூர்:
கடை வீதியில்
8—9—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: தி. ந. சம்பந்தம்
பேசுவோர்:
வி. எஸ். கோவிந்தராசன்
பி. ஆர். கருணாகரன்
சீ. இராமலிங்கம்
டி. எம் கணபதி

★

அளம்பளம் — (கள்ளக்குறிச்சி வட்டம்):
தி. மு. கழகத் துவக்கவிழா
8—9—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: ஆர். வி. கோபால்
பேசுவோர்:
போ. சோக்கலிங்கம்
மு. பாண்டியன்
எம். தங்கவேல்
மு. அந்தாலம்
ஆ. இராமசாமி

★

சத்திரப்பட்டி:
8—9—57 இரவு 9 மணிக்கு
தலைவர்: கே. மகாலிங்கம்
பேசுபவர்:
இரா. நெடுஞ்செழியன்

★

கோவை—கோட்டை:
(ஈசுவரன் கோவில் வீதியில்)
பேசுவோர்:
கோவை-செழியன்
மற்றும் பலர்

★

இராசபாளையம்:
(புதிய பஸ் நிலையத்தருகில்)
8—9—57 மாலை 5-30 மணிக்கு
பேசுபவர்:
இரா. நெடுஞ்செழியன்

மதுரை-எஸ். முத்து சுற்றுப்பயணம்

செப்டம்பர்:—
7: துகவூர்
11: குமாரலிங்கம்

'நம் நாடு' இதழ் விற்பனையாளர் தேவை

★

கீழ்க்கண்ட ஊர்களில் 'நம் நாடு' இதழை விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை; நிபந்தனைகளுக்கு விண்ணப்பித்துக் கொள்க.

பூதலூர்
அறந்தாங்கி
திண்ணனூர்
மதுராந்தகம்
கல்லிடைக்குறிச்சி
இராஜசிங்கமங்கலம்
பேளூர் (சேலம் மாவட்டம்)
ஆலமரத்துப்பட்டி (கரூர் வட்டம்)
பாகசாலை (மாயூரம்வட்டம்)

—நிர்வாகி: 'நம் நாடு'

கோவிந்தசாமி — சந்திராதேவி திருமணம்

8—9—57 காலை 9 மணிக்கு, வில்லிவாக்கம், மேலண்டை மாடவீதி, மாங்காடு எல்லப்ப செட்டியார் சத்திரத்தில் தோழர் கோவிந்தசாமி — தோழியர் சந்திராதேவி திருமணம் தோழியர் சத்தியவாணி முத்து எம் எல்.ஏ. அவர்கள் தலைமையில் நடைபெறும்; அண்ணு அவர்களும்,தோழர்கள் கே. எம். கண்ணபிரான், ஆர். ஜார்ஜ் ஆகியோரும் வாழ்த்துரை வழங்குவர்.

பழனிச்சாமி — திரிபுரசுந்தரி திருமணம்

8—9—57 காலை 9 மணியளவில், பெரிய காஞ்சீபுரம்—கீழண்டை இராசவீதியில் உள்ள யாதவாள் சத்திரத்தில் அண்ணு தலைமையில், தோழர் பழனிச்சாமி—தோழியர் திரிபுரசுந்தரி திருமணம் நடைபெறும்; அறிஞர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

சேலம்—குகை தி. மு. க. நூல் நிலையத் திறப்புவிழா

8—9—57 இரவு 8 மணிக்கு, சேலம்—குகை மாரியம்மன் கோவில் அருகில் தோழர் ஆர். கே. செயராமன் தலைமையில் ஷ விழா நடைபெறும். பேராசிரியர் க. அன்பழகன் எம். எல். ஏ.; நூல் நிலையத்தைத் துவக்கிவைத்துச் சொற்பொழிவாற்றுவார்.

நக்கீரர் பட்டிமன்றம்

7—9—57 மாலை 6-30 மணியளவில், சென்னை—பெத்துநாய்க்கன்பேட்டை மணவழகர் மன்றத்தில், நக்கீரர் பட்டி மன்றக் கூட்டம் நடைபெறும்; சிறுவை—மோகனசுந்தரம் தலைமையில் தோழர்கள் சி. சம்பந்தம், கௌரிசங்கர் ஆகியோர் 'கலப்பு மணம்' என்பது பற்றிப் பேசுவர்.

கொளாநல்லி:
(ஈரோடு வட்டம்)
8—9—57 மாலை
பேசுவோர்:
எஸ். நெடுமாறன்
வி. சே. இராசு

★

வேடசந்தூர்:
11—9—57 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
காஞ்சி-கல்யாணசுந்தரம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ